# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**மனு எண். 016/நகராட்சி/2020**

**நாள் : 26/02/2020**

திரு சி. அப்பாசாமி,
இடைப்பாடி – 637 101. – **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர் /
குழாய் பொருத்துநர்,
எடப்பாடி நகராட்சி. – **எதிர் மனுதாரர்கள்**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், ஆவணிப் பேரூர் மேல்முகம் கிராமம், வெள்ளரி வெள்ளி பிரிவு சாலை, க. புதூர், மேற்குத் தெரு, 95–G, கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு சி.அப்பாசாமி அவர்களின் 02.01.2020 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 016/2020 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், ஆவணிப் பேரூர் மேல்முகம் கிராமம், வெள்ளரி வெள்ளி பிரிவு சாலை, க. புதூர், மேற்குத் தெரு, 95–G, கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு சி.அப்பாசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் தான் தாக்கல் செய்த 06.08.2018 நாளிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட 30.10.2019 நாளிட்ட ஆணை எண்.182/2018–ஐ மறு பரிசீலனை செய்து தன்னிடம் விசாரணை மேற்கொண்டு அதன் பின்பு புதிய ஆணை பிறப்பிக்கும்படி மனுச் செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் தனது 06.08.2018 நாளிட்ட மனுவில் தினகரன் நாளிதழில் 18.04.2018 அன்று வெளியிடப்பட்ட செய்தியின் அடிப்படையில் இடைப்பாடி நகராட்சியில் குடிநீர் இணைப்புகள் வழங்குவதில் நடைபெற்ற முறைகேடுகள் மற்றும் நகராட்சியின் பிட்டர் திரு சுரேஷ் என்பவரிடம் குடிநீர் இணைப்பிற்கான டெபாசிட் தொகை மற்றும் ரூ.3,000/– கையூட்டு வழங்கியது (2012–ஆம் ஆண்டில்) குறித்து மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட குற்றமுறையீடுகள் 182/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்து இம்முறைமன்ற நடுவம் நடவடிக்கை மேற்கொண்டது. குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டதில் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை என நகராட்சி ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் நகராட்சி அலுவலர்களிடம் நடைபெற்ற விசாரணை மூலம் அறிய முடிந்தது. எனினும், குடிநீர் இணைப்பு சம்பந்தமான முறைகேடுகள் மற்றும் கையூட்டு வழங்கிய புகார் குறித்து 19.12.2018 நாளன்று மனுதாரரிடம்

விசாரணை மேற்கொள்ள 09.11.2018 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் மனுதாரர் விசாரணைக்கு வருகை தரவில்லை. எனவே, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம், பிரிவு 10 (3) (c) –இன் கீழ் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கையூட்டு வழங்கியதாக தெரிவிக்கப்பட்ட புகார் மற்றும் குடிநீர் இணைப்புகள் சம்பந்தப்பட்ட புகார்களுக்கு விசாரணைக்கு வருகை தந்து உரிய விளக்கம் அளிக்கத் தவறியது ஆகிய காரணங்களினால் 06.08.2018 நாளிட்ட மனுதாரரின் முறையீட்டு மனு 30.10.2019 நாளிட்ட ஆணை எண்.182/2018–இல் நிராகரிக்கப்பட்டு ஆணையிடப்பட்டது.

3. மேற்குறிப்பிட்ட ஆணையினை மறுபரிசீலனை செய்யக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள 02.01.2020 நாளிட்ட மனு பரிசீலிக்கப்பட்டு, மனுதாரரின் முந்தைய முறையீட்டு மனு மற்றும் 02.01.2020 நாளிட்ட மனு ஆகிய மனுக்கள் குறித்து மனுதாரரிடம் உரிய விளக்கத்தினைப் பெறும் பொருட்டு 14.02.2020 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வருமாறு மனுதாரருக்கு 22.01.2020 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால், மேற்குறிப்பிட்ட நாளில் நடைபெறவிருந்த விசாரணைக்கு மனுதாரர் வருகை தரவில்லை. எனவே, இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு வருகை தந்து உரிய விளக்கம் அளிக்க மனுதாரர் தவறியதாலும் மனுதாரர் போதிய ஆதாரங்கள் ஏதும் அளிக்காததாலும் 02.01.2020 நாளிட்ட மனுவினையும் தள்ளுபடி செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2020**–ஆம் ஆண்டு, **பிப்ரவரி** திங்கள், **26**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

4.3.20.

செயலாளர்.

4/7

பெறுநர்

1. திரு சி. அப்பாசாமி,
   95 G, க. புதூர் மேற்கு தெரு,
   வெள்ளரி வெள்ளி பிரிவு ரோடு,
   எடப்பாடி,
   சேலம் மாவட்டம் – 637 101.

2. நகராட்சி ஆணையர்,
   இடைப்பாடி நகராட்சி,
   இடைப்பாடி,
   சேலம் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி

4.3.2020